# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **180/நீ/2018**
நாள் : **10/10/2019**

**திரு R ஆறுமுகம்,**
**எண்.323, கட்டபொம்மன் தெரு,**
**விருது நகர் – 626 001.** – **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
விருதுநகர் நகராட்சி,
விருதுநகர். – **எதிர் மனுதாரர்**

விருதுநகர் மாவட்டம், விருதுநகர், கட்டபொம்மன் தெரு, 323 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு. R ஆறுமுகம் அவர்களின் 01.08.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 180/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு சம்பந்தமாக நகராட்சி ஆணையர் சமர்ப்பித்த அறிக்கை மற்றும் விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் மற்றும் நகராட்சி ஆணையர் அளித்த வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

விருதுநகர் மாவட்டம், விருதுநகர், கட்டபொம்மன் தெரு, 323 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு. R. ஆறுமுகம் என்பவர், விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட நில அளவை எண். 206 இல் உள்ள நிலம் நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதென்றும் அந்நிலத்தில் உள்ள கிணற்றினை மூடி சிலர் சுயலாபத்திற்காக ஏழு கடைகள் கட்டி மாத வாடகையாக ரூ.10,000/- வீதம் தனி நபர்கள் கடந்த 30 ஆண்டுகளாக வசூலித்து வருவதாகவும், நகராட்சியின் கிணற்றை மூடி கடைகள் கட்டி வாடகை வசூல் செய்வதற்கு நகராட்சி அலுவலர்களும் உடந்தை என்று தெரிவித்து சம்பந்தப்பட்ட நகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி முறையீடு செய்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரிடம் 24.09.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விருதுநகர் நகராட்சியில் நகர நில அளவை எண். 206 இல் இருந்த நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட கிணற்றை மூடி, அதில் 7 கடைகள் கட்டி அந்தக் கடைகளுக்கு வாடகையாக தலா ரூ.10,000/- வீதம் நாயக்கமார் பொது நலசங்கம் என்ற பெயரில் 11 நபர்கள் அதை அனுபவித்து வருகிறார்கள் என்று விசாரணையின் போது தெரிவித்தார். மேற்குறிப்பிட்ட நாயக்கமார் பொது நலச் சங்கம் திரு.ராமகிருஷ்ணன் என்பவரின் தலைமையில் செயல்பட்டு வருகிறதென்றும் கட்டடங்கள் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்டன என்று தனக்குத் தெரியாது என்றும், இது சம்பந்தமாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்ற ஆவண நகல்களை தாக்கல் செய்ததுடன், கிணற்று நிலத்தினை மீட்டு இதுவரை வசூலித்த வாடகைத் தொகையினை நகராட்சிக் கணக்கில் சேர்க்குமாறும் விசாரணையின் போது கேட்டுக் கொண்டார்.

3) முறையீட்டு மனுதாரரின் மனு குறித்து இம்முறைமன்ற நடுவத்தின் 09.08.2018 நாளிட்ட அறிவிப்பாணையில் நகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது. நகராட்சி ஆணையர் தனது 30.08.2018 நாளிட்ட கடித எண். 3154/18/F2 இல் நாயக்கமார் பொது டிரஸ்டிடமிருந்து இந்நிலம் சம்பந்தமான ஆவணங்கள் கோரப்பட்டுள்ளதென்றும் அவ்வாவணங்களை மேற்குறிப்பிட்ட கடிதம் கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தாக்கல் செய்யுமாறு சம்பந்தப்பட்ட சங்கத்தினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதென்று தனது 06.09.2018 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து நகராட்சி ஆணையரிடம் 25.02.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது உரிய ஆவணங்களை தாக்கல் செய்ய ஒரு மாத காலம் அவகாசம் கோரியதுடன் இது சம்பந்தமாக உயர்நீதிமன்றத் தீர்ப்புகள் அல்லது வழக்குகள் எதுவும் நிலுவையில் உள்ளதா என்பதை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார்.

4) விருதுநகர் நகராட்சி, நகர நில அளவை எண். 206 ல் 1223.84 ச.மீட்டர் பரப்பளவிலான நிலம் நகர நில அளவை பதிவேட்டில் நத்தம் முனிசிபல் கிணறு காலி இடம் எனப் பதிவுகள் இடப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட நிலப்பகுதியில் இருந்த நகராட்சி கிணறு மூடப்பட்டு 3 கடைகள் 50 ஆண்டுகளுக்கு முன்பும் 4 கடைகள் நான்கு ஆண்டுகளுக்கு முன்பும் கட்டப்பட்டுள்ளன என்று 31.07.2018 நாளிட்ட அறிவிப்பு எண். 3154/18/எப்2 இல் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட ஏழு கடைகளுக்கும் 176-1 முதல் 176-7 வரையிலான கதவு எண்கள் வழங்கப்பட்டு 11219, 11220, 11221, 11559, 11560, 11561 மற்றும் 11562 எண்களிட்ட வரிவிதிப்பில் நாயக்கமார் பொது டிரஸ்ட் என்ற பெயரில் சொத்து வரிவிதிப்பும் செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. முறையீட்டு மனுதாரர் மேற்குறிப்பிட்ட விவரங்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்று நகராட்சி நிலத்தில் இருந்த கிணற்றை மூடி மேற்குறிப்பிட்ட கடைகள் கட்டப்பட்டு ஒரு குறிப்பிட்ட சாதி சங்கத்தினைச் சேர்ந்த தனி நபர்கள் பயன்படுத்தி வருகின்றனர் என முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் 01.08.2018 நாளிட்ட மனுவில் முறையீடு செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு சம்பந்தமாக இம்முறைமன்ற நடுவத்தின் 09.08.2018 நாளிட்ட அறிவிக்கை எண்.180/2018 இல் அறிக்கை கோரப்பட்ட பின்னரே நாயக்கமார் பொது டிரஸ்ட்டிற்கு அந்நிலம் அவர்களுக்கு உரிமையானது என்பதற்கான ஆவணங்கள் ஏதும் இருந்தால் 30.08.2018 நாளிட்ட அறிவிப்பு எண். 3154/எப்2/2018 கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும், தவறும் நிலையில் மேற்கூறிய ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என மேற்குறிப்பிட்ட டிரஸ்டிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து விருதுநகர் வட்டாட்சியருக்கு முகவரியிட்ட 18.02.2019 நாளிட்ட கடிதத்தில், ஆக்கிரமிப்புதாரர்கள் சமுதாய அமைப்புடன் கூடிய பொது நலச் சங்கம் என்பதால் சட்ட ஒழுங்கு பிரச்சனையைக் கருத்தில் கொண்டு மேற்படி ஆக்கிரமிப்பு தொடர்பான பொருளை வட்ட அளவிலான ஆக்கிரமிப்பு அகற்றுதல் தொடர்பான கூட்டத்தில் விவாதித்து விசாரணை மேற்கொண்டு அரசாணை எண். 540– இன் கீழ் தகுந்த உத்தரவு வழங்குமாறும் நகராட்சி ஆணையர் கோரியுள்ளார்.

5) இந்நிலையில், ஆக்கிரமிப்புதாரர்களான விருதுநகர் கோட்டைபட்டி இந்து என்ற கொல்ல இராஜகம்பள நாயக்கர் பொது நலசங்கம் சார்பாக அதன் தலைவர் 39/2019 எண்ணிட்ட அசல் வழக்கினை விருதுநகர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும், 69/2019 எண்ணிட்ட அசல் வழக்கினை விருதுநகர் சார்பு நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் அவ்வழக்குகளின் தீர்ப்பின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என நகராட்சி ஆணையர் தனது 16.8.2019 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

6) நகராட்சி நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினரால் கடைகள் கட்டப்பட்டுள்ளன என்ற விவரத்தை நகராட்சி தெரிவித்த பின்பே முறையீட்டு மனுதாரர் ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். நகராட்சி

நிலம் ஆக்கிரமிப்புக்குள்ளாகி உள்ளது என நகராட்சி அலுவலர்கள் தெரிந்திருந்தும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் கண்டும் காணாமல் ஆக்கிரமிப்புக்கு துணை போயுள்ளனர் எனத் தெரிய வருகிறது. மேலும் 4 கடைகள் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தான் கட்டப்பட்டன என்று ஆணையர் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட கடைகளுக்கு கதவு எண் வழங்கப்பட்டு நாயக்கமார் பொது டிரஸ்ட் பெயரில் சொத்து வரி விதிப்பும் செய்யப்பட்டுள்ளது. எனவே, சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கடைகளுக்கு கதவு எண் மற்றும் சொத்துவரி விதிப்பு நகராட்சி அலுவலர்களாலேயே வழங்கப்பட்டுள்ளன. அதுசமயம், கடைகள் கட்டப்பட்ட நிலம் நகராட்சிக்குப் பாத்தியப்பட்டது என அறிந்தும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர் பயன்படும் வகையில் நகராட்சி அலுவலர்கள் செயல்பட்டுள்ளனர் எனவும் அறிய முடிகிறது. நகராட்சி அலுவலர்களின் இத்தகைய செயல்கள் கடமை தவறிய செயலாகவே கருதப்படுகிறது. எனவே, இந்நேர்வில் சம்பந்தப்பட்ட நகராட்சி அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு R. ஆறுமுகம்,
   எண்.323, கட்டபொம்மன் தெரு,
   விருது நகர் – 626 001.

2. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   இராஜா அண்ணாமலைபுரம்,
   சாந்தோம் நெடுஞ்சாலை,
   சென்னை – 28.

3. நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்,
   திருநெல்வேலி மண்டலம்,
   திருநெல்வேலி.

4. நகராட்சி ஆணையர்,
   விருதுநகர் நகராட்சி,
   விருதுநகர்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி